**ரணவிரு சேவை அதிகாரசபை - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரணவிரு சேவை அதிகார சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, சிகர சொத்து மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, அதிகார சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். அதிகாரசபையின் கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக அதிகாரசபை தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய

வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு நோக்கெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, அதிகாரசபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது அதிகாரசபையின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க அதிகாரசபையின் செயற்பட்டுள்ளதா என்றும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்துடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 11 | | |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு, தரகு விகிதம், ஊழியர் புரள்வு, ஏனைய ஆயுட் கணிப்பு கற்பனை அடிப்படையில் பின்னர் வரும் ஊழியர் நலன்களுக்கு நிதி ஏற்பாடு செய்யும் கொள்கையை தயாரிக்க வேண்டுமாயினும், அதிகாரசபை மீளாய்வாண்டு இறுதியில் ஊழியர்கள் பெற்ற இறுதிச் சம்பளத்தையும் சேவைக் காலத்தையும் | அவ்வாறான கொள்கையை தயாரிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும். | நியமங்களுக்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அடிப்படையாகக் கொண்டு 63 ஊழியர்களுக்கு ரூபா 16,922,149 நிதியேற்பாடு செய்திருந்தபோதும், பின்னர் வரும் உழியர் நலன்களின் பொருட்டு நிதி ஏற்பாட்டை மேற்கொள்வதற்கு அவ்வாறான கொள்கை தயாரிக்கப்படவில்லை.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின்போது காலக் கழிவான ரூபா 473,448 கணக்கிலிடப்படவில்லை. | அது 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்படும். | அரசாங்க மூலதன மானியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு காலக்கழிவு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) பயன்படுத்தப்படாத ரூபா 88,614 கட்டிட பொருள் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருந்தது | அது 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்படும். | கட்டிடம் பெறுமதி சரிசரக் கணிப்பிடப்பட்டு மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (இ) திறைசேரி உண்டியலுக்கு உரிய மீளாய்வாண்டினது வட்டி வருமானம் ரூபா 294,922 கூடுதலாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. | மேற்படி குறைபாடானது 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வட்டி வருமானத்தை சரிவரக் கணித்துக் கணக்கிலிட வேண்டும். |
| (ஈ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 க்கு முரணாக பயனற்றிருக்கும் ரூபா 152,000 பெறுமதியான 4 லெப்டொப் கணனிகள் சம்பந்தமாக மீளாய்வாண்டு இறுதிவரை ரூபா 96,946 தேய்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் கொள்கைக்கமைய தேய்மானம் கணிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளில் கணக்கிலிடப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 க்கமைய சொத்து பயன்படுத்தப்படும் நாள் முதலாக தேய்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நி.பி 371 | பணி முடிவடைந்தவுடன் முற்பணம் தீர்வு செய்யப்பட வேண்டுமாயினும், 2014 ஆம் ஆண்டின் போது 2 உத்தியோகத்தர்களுக்கு 5 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 1,830,450 கூட்டுத் தொகையையுடைய முற்பணம் 2019 டிசம்பர் 31 ஆந் திகதியளவிலும் தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை இன்றி இருந்தது. | இந்த முற்பணத்தை வழங்குவதற்குரிய சகல கோவைகளும் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. பரிசீலனை மேற்கொள்ளப்படுகின்றது. அவ்விசாரணை தற்சமயமும் நடைபெற்றவாறுள்ளது. | முற்பணத்தை வழங்குவதற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை சக்திமிக்கதாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.2.6 மற்றும் நிதிப்பிரமாணம் 756 | சகல நிதி ஆண்டிலும் யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் பொருட் கணிப்புச் சபை அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும் 2019 ஆம் ஆண்டிற்கான குறித்த பொருட் கணிப்பீட்டில் சபை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | 2019 வருடாந்த பொருட் கணிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டவாறு உள்ளது குறித்த வேலை முடிவடைந்ததும் சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணங்களின்படி பொருட் கணிப்புச் சபை அறிக்கையைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2002 மே 24 ஆந் திகதிய 21 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டினது செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 2017, 2018 ஆம் ஆண்டு அறிக்கைகள் 2019 டிசம்பர் 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்தன. | 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்கு உரிய செயலாற்றல் அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. | சுற்றறிக்கைப் பிரகாரம் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 14,424,207 மிகை ஆகும். இதற்கு நேரெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 22,447,903 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 36,872,110.61 அபிவிருத்தி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டை விட மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 25,407,720 குறைவடைந்தமை மற்றும் ரூபா 11,464,390 வருமான அதிகரிப்பு என்பன இந்த அதிகரிப்புக்கான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களது போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டினது மொத்த வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 11,464,390 அதிகரித்திருந்தது. அரசாங்க மீண்டுவரும் பங்களிப்பை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 20.609,831 ஆகிய 5.3 சதவீதத்தால் அது அதிகரித்திருந்தமையே இதற்கான காரணமாகும். அவ்வாறே, செயற்திட்டச் செயற்பாட்டுச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 15,064,052 குறைவடைந்தமையும் உடன்படிக்கைக்குள்ளான சேவைகளின் கிரயம் ரூபா 4,984,585 குறைவடைந்தமையும் பிரதான வேறுபாடுகளாக இனங்காணப்பட்டன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிறுவனத்தின் நடைமுறை விகிதம் 1:0.029 ஆகும். மீளாய்வாண்டினது நடைபெறும் நடைமுறைச் சொத்துக்களில் 70 சதவீதம் காசு மற்றும் காசுக்கு நிகரானவையைப் பிரதிநிதித்துவப்படுத்தியமையால் நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க சொத்துக்கள் திரவவியல் சொத்துக்களில் தேங்கி இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு முன்னேற்றம்

ரணவிரு நலனோன்பலுக்கு அதிகாரசபை 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்திய சுகாதார மேம்பாட்டுச் செயலமர்வுகள், மருத்துவ சிகிச்சை முகாம்கள், மனோவித்தியா செயலமர்வுகள் என்பன 2018 ஆம் ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் நடாத்தப்படவில்லை. இதற்குப் புறம்பாக, (ஊனமுற்ற) முன்னைய ஆண்டின் போது நடாத்தப்பட்ட ஊனமுற்ற ரணவிரு செயலமர்வுகள், அவசரகால இடர் திறன் மேம்பாடு, சுய வேலை வாய்ப்பு உதவி மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி போன்ற நிகழ்ச்சித்திட்டங்களும் மீளாய்வாண்டில் நடைபெறவில்லை. அவ்வாறே, மாபிய கெபகறு புலமைப்பரிசில் மற்றும் மாபிய சுரகும் படி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிற்கான செலவினம் வருடாந்தம் படிப்படியாக குறைவடைந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊனமுற்ற போர்வீரர்களின் பொருட்டு கோரிக்கை விடுத்த சக்கர நாற்காலிகள், கைகளில் தாங்கும் ஊன்றுகோல்கள், செயற்கை கால், பாத அணிகள் என்பன முறையே 354, 583, 472, 165 என்பனவாகும். எவ்வாறாயினும், உள்ளவாறு வழங்கப்பட்டவை முறையே 25, | ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிதியில் 84.25 சதவீதம் 2019 ஆம் ஆண்டின் அரை இறுதிப் பகுதியில் ஆகும். குறித்த காலத்தில் பொருட் கொள்வனவை மேற்கொள்ள முடியவில்லை. | ஏற்பாடு செய்யப்பட்ட நிதி அதிகூடிய அளவில் பயன்படுத்தப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

29, 9, 0 மாத்திரமே. அவ்வாறே, இதன் பொருட்டு அபிவெனுவென் அபி நிதியத்திலிருந்து ரூபா 10 மில்லியன் கிடைத்திருந்தபோதும், தேவையான நடவடிக்கைகள் எடுத்திராததால் இத்தொகை 2019 டிசம்பர் 31 அன்று மீண்டும் அந்த நிதியத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

**3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரணவிரு மாபிய ரெகவரண படி திட்டத்தின் கீழ் 2016 யூன் தொடக்கம் 2017 நவம்பர் வரை 18 மாத காலத்தின்போது 2 கணக்கீட்டு உரிமையாளர்களுக்கு முறையற்றவாறு ரூபா 5,940,500 வழங்கப்பட்டிருந்தது. இத்தொகையில் ரூபா 4,978,500 இதுவரை அறவிடப்படவில்லை. | குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு புகார் சமர்ப்பிக்கப்பட்டு தற்சமயம் விசாரிக்கப்பட்டவாறு உள்ளது. | இவ்வாறான நடவடிக்கைகள் மீண்டும் நடைபெறாதிருக்க கட்டுப்பாட்டு முறைமை முறையாக்கப்பட்டு ஏற்பட்ட இழப்பை அறவிட வேண்டும். |

**3.4 குறைவான நிதிப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஊனமுற்ற போர்வீரர்களுக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 2,700,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 55 சதவீதமான ரூபா 1,492,888 மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, கட்டிட மற்றும் நிர்மாண வேலைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 480,000 நிதியானது பயன்படுத்தப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டின்போது ஆரம்பிக்கப்பட்ட இந்த பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட முடியாமையால், ஏற்பாடு செய்யப்பட்ட நிதி எஞ்சியது. அதன் காரணமாக, செயலாற்றல் குறைந்த மட்டத்தில் இருந்தது. மேலும், பெறப்பட்ட மூலதன மானியம் குறித்த வேலையை பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக அமையாததால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி எஞ்சியது. | ஏற்பாடு செய்யப்பட்ட நிதியின் மூலம் அதிகூடிய பயன்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள்**

---

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாபிய சுரகும் படி நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டான நலன் பெறுநர்கள் உயிருடன் இருப்பதை உறுதி செய்யாது 237 நலன் பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 17,550,489 பயன்படுத்தப்படாது 01 முதல் 10 ஆண்டுகளாக இருந்தது. | எதிர்வரும் ஒரு மாதத்தில் அந்த நலன்பெறுநர்களது பூரண அறிக்கை தயாரிக்கப்பட்டு அதற்கமைய மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | நலன்பெறுநர்கள் தொடர்பான தகவல்கள் நாளதுவரையாக்கப்படுதல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை சக்திமிக்கதாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நலன் பெறுநர்கள் மரணமடையும் சந்தர்ப்பத்திலும் போர் வீரர்கள் சம்பளத்தில் 25 சதவீதம் படியாக வழங்கப்படும் சந்தர்ப்பத்திலும் மாபிய சுரகும் நலனைப் பெறும் நலன்பெறுநர்களின் கணக்கு இரத்துச் செய்யப்பட்டு அத்தொகை அதிகார சபைக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டுமாயினும், இரத்துச் செய்யப்பட வேண்டிய 74 நலன்பெறுநர்களது கணக்குகளில் இருந்த ரூபா 2,493,756 அறவிடப்படுவது 2019 டிசம்பர் 31 வரை நடைபெறவில்லை. | எதிர்வரும் மாதத்தில் அந்த நலன்பெறுநர்களது பூரண அறிக்கை தயாரிக்கப்பட்டு அதற்கமைய மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | நலன்பெறுநர்களது தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை சக்திமிக்கதாக்கப்பட வேண்டும். |
| (இ) | அக்குறஸ்ஸ யாக்கபெத்த பிரதேசத்தில் நன்கொடையாகப் பெறப்பட்ட காணி மற்றும் கட்டிடம் என்பன ரூபா 10.1 மில்லியன் செலவில் புனரமைக்கப் | இந்தக் காணியையும் ஏனைய சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்துடன் மாத்தறையில் அமைந்துள்ள இலங்கை | நன்கொடையாகப் பெறப்பட்ட இந்த சொத்தை குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்துவது அவசியமாகும். |

| | | |
|---|---|---|
| பட்டிருந்தன. இதனை பலநோக்கு பயிற்சி நிலையமாகப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட போதும், ரூபா 26.7 மில்லியன் பெறுமதியான காணியும் கட்டிடமும் பாதுகாப்பு இல்லாதும் பயனற்றும் இருப்பது அவதானிக்கப்பட்டது. | இராணுவம் (3 ஆம் கெமுனு) முகாமிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | |

**3.6 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைத் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விருசும்துறு செயற்திட்டத்தின் கீழ் 2017 முதல் 2019 வரை 1464 முற்றாக முடிவடைநத வீடுகளும் 1275 அரைப்பங்கு முடிவடைந்த வீடுகளும் அமைக்கப்பட இருந்தன. எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டு இறுதியளவில் 195 முடிவடைந்த வீடுகளும் 298 அரைப்பங்கு முடிவடைந்த வீடுகளும் மாத்திரமே அமைக்கப்பட்டிருந்தன. அதற்கமைய, மூன்று ஆண்டகள் முடிவடையும் போது 13 சதவீத முடிவடைந்த வீடுகளும் 23 சதவீத அரைப்பங்கு முடிவடைந்த வீடுகளும் மாத்திரமே இருந்தன. | இச்செயற்திட்டக் காலம் 2022 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, எதிர்வரும் 2 ஆண்டுகளில் நிர்மாண வேலை முற்றாக முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |